**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 153/2022 PW1 .**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வெற்றிவேல் | தந்தை/கணவர் பெயர்: ஆறுமுகம் | |
| ஊர் | : | தாலுகா | : |
| வயது | : | தொழில் | : |
| ஜாதி | : | சமயம் | : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.11.2025

---

**(எதிரி ஆஜரில்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**<u>12.11.2025 முதல் விசாரணை</u>:**

1. நான் சிங்கம்புணரியில் குடியிருக்கிறேன். எண்ணெய் மில் வைத்து தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரி என் வீட்டிற்கு எதிரே பழைய இரும்பு கடை வைத்திருக்கிறார். 23.07.2020 ம் தேதி நான் வெளிநாட்டில் இருந்த போது என் அப்பாவுடன் எதிரி சண்டை போட்டு என் வீடு புகுந்து அடித்து என் அப்பா ஆறுமுகத்திற்கு முகத்தில் காயம் ஏற்பட்டது. அது சம்மந்தமாக என் அப்பா வழக்கு நடந்து வந்தது. நான் கடந்த 2020 அக்டோபர் மாதம் விடுமுறையில் ஊருக்கு வந்தேன். இந்நிலையில் 20.10.2020 ம் தேதி மாலை சுமார் 04.30 மணியளவில் என் தங்கை வீட்டிற்கு சென்று திரும்பி வந்து வீட்டில் என் மனைவியை இறக்கி விட்டு என் மகளுடன் வண்டியில் அமர்ந்து திருந்த போது எதிரி கையில் கட்டையை வைத்துக்கொண்டு ஏண்டா என்னை பார்த்து முறைக்கிறாய் போடா சுன்னி என்று கெட்ட வார்த்தை பேசி ஏண்டா என்னை எப்போதும் முறைகிறாய் என்றும் சத்தம் போட்டார். உன்னை இன்னைக்கு அடிக்காமல் விடுறது இல்லை என்று சொல்லி அச்சுறுத்தினார். எதிரி அங்கியிலிருந்த அவருடைய அப்பாவிடம் சொல்லி எதிரி மகன் மற்றும் மனைவியை அழைத்து வர சொல்லி அவர்கள் வந்த பிறகு நான்கு பேரும் சேர்ந்து வந்து 1 ம் எதிரி கத்தியை காண்பித்து உன்னை குத்தி நான் செலவை பார்த்துக்கொள்கிறேன் என்று சத்தம் போட்டார். கடைக்குள் சென்று சட்டை மற்றும் வாட்ச் கழைட்டி வைத்து விட்டு வந்து மீண்டும் அதையை சொன்னார். என் வண்டியை பிடித்து இழுத்ததில் வண்டியின் முன் பாகத்தில் இருந்த வைசர் உடைந்து சேதாரம் ஆனது. என் அப்பா என்னை காவல் நிலையத்திற்கு செல்லலாம் என்று சொன்ன போது என் அப்பாவை பார்த்து எதிரி அன்னைக்கு என்னை அடித்தது பத்தலையா என்று அவரையும் மிரட்டினார். அவசர போலீஸ் எண் 100 க்கு அழைத்த போது அவர்கள்

எடுக்கவில்லை. பின்னர் ஆய்வாளரின் அழைபேசிக்கு அழைத்த போது அவரும் எடுக்கவில்லை. பின்னர் காவலர் செயலி மூலம் தகவல் தெரிவித்து காவலர்கள் வந்தார்கள். அன்றைய தினமே காவல் நிலையத்திற்கு சென்று புகார் மனு கொடுத்தேன். சம்பவ நடந்த இடத்திலிருந்த சிசி டிவி வீடியோ பதிவை போலீசாரிடம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட ஆவணம் நான் கொடுத்த புகார் ஆகும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் மனு அ.த.சா.ஆ –1 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. அன்றைய தினமே நான் புகார் கொடுத்து விட்டேன். நான் மறுநாள் தேதி காவல் நிலையத்தில் எழுத சொன்னார்கள் நான் எழுதவில்லை. வண்டியின் ஏற்பட்ட சேதாரத்திற்கு 250 ரூபாய் செலவாகியது, போலீசார் அதற்கான இரசீது கேட்டார்கள் கடையில் தாரததால் நான் கொடுக்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

2. என் மீது ஒரு வழக்கு உள்ளது. இந்த வழக்கு தொடர்பான எதிரி என் மீதும், என் தகப்பானார் மீதும் கொடுத்த புகாரானது நடக்காத சம்பவத்திற்கு கொடுத்தாகும். இரு தரப்பினருக்கும் மூன்று மாதத்திற்கு முன்பு வழக்கு உள்ளது. எனது அப்பா எதிரிகள் மீது தனி புகார் கொடுத்து அது நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். கட்டை கம்பியை போலீசார் கைப்பற்றினார்களா என்றால் தெரியாது. வண்டி உடைந்ததை போலீசார் வந்து பார்த்தார்கள். எனது இரசீது கேட்பார்கள் என்று தெரியாது. அதனால் வாங்கவில்லை. போட்டோவை போலீசாரிடம் கொடுத்தேன். புகார் அன்றையதினமே கொடுத்தேன். எழுத்துமூல புகார் அன்றையதினம் 06.00 மணிக்கு கொடுத்தேன். இதற்கிடையில் போலீசார் விசாரித்தார்கள். சம்பவ நடந்து கொண்டிருக்கும் போது போலீசார் விசாரித்தார்கள் . புகார் கொடுத்த பிறகும் விசாரித்து எழுதி கொண்டார்கள். நான் சொல்வது போல் சம்பவம் நடக்கவில்லை என்றாலும், எனது அப்பாவுடன் சண்டை போட்டதால் எதிரியுடன் வீண் சண்டை செய்து அது சம்மந்தமாக எதிரி என்மீதும் , என் அப்பா மீதும் புகார் கொடுத்ததால் அதிலிருந்து தப்பிபதற்காக பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவ்ம அனைத்தும் ரோட்டில் நடந்தது என்றால் சரிதான். எனது வீட்டிற்குள்ளோ எதிரியின் வீட்டிற்குள்ளோ சம்பவம் நடக்கவில்லை என்றால் சரிதான்